DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.

PRC.No.02/2017

PW - 9

| | | |
|---|---|---|
| Name | : | C. பிச்சை ( **LW. 13** ) |
| Father's / Husband Name | : | த/பெ.A. சொக்கலிங்கம் |
| Village | : | சமயநல்லூர் |
| Taluk | : | மதுரை வடக்கு |
| Calling | : | DSP ஓய்வு |
| Age | : | 68 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 29.07.2026 **தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**முன் விசாரணை:-**

1. நான் காவல் துறையில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து சென்ற 30.06.2016 ம் தேதி பணியில் இருந்து ஓய்வு பெற்றேன். தற்போது மேற்படி முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். கடந்த 05.06.2009ம் தேதி வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது நான் மருத்துவ விடுப்பில் சென்றிருந்த போது வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் கனகராஜ் என்பவரால் பதிவு செய்யப்பட்ட வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.176/2009 சட்டப்பிரிவு 394 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பொறுப்பு காவல் ஆய்வாளர் வேலூர் காவல் நிலைய ஆய்வாளர் ரவிச்சந்திரன் என்பவரால் முதல் புலன் விசாரணைக்கு எடுத்து விசாரணை செய்துள்ளார். மேற்படி ஆய்வாளர் ரவிச்சந்திரன் என்பவர் தற்போது இறந்துவிட்டார். அவரது கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சையம். மேற்படி வழக்கின் சம்பவயிடமான பெருக்காம்பாளையம், அருந்ததியர் தெருவிற்கு சென்று 05.06.2009 ம் தேதி காலை 07.30 மணிக்கு சாட்சிகள் சண்முகம், பொன்னுவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.9 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. சம்பவயிடத்தை குறிக்கும் வகையில் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) சாட்சிகள் தனபால், அர்த்தனாரி, சக்திவேல், செங்கோட்டையன், தேவராஜ், சண்முகம்,பொன்னுவேல் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு

செய்துள்ளார். மேற்படி வழக்கினை நான் மருத்துவ விடுப்பு முடிந்து 18.06.2009ம் தேதி மீண்டும் நிலைய பொறுப்பிற்கு வந்தபோது இவ்வழக்கு கோப்பினை பெற்று பரிசீலனை செய்து மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். இந்த வழக்கின் சம்பவ இடத்தை 18.06.2009ம் தேதி பார்வையிட்டேன். சாட்சிகளை விசாரணை செய்தேன். மேற்படி சாட்சிகள் முதல் விசாரணை மேற்கொண்ட ஆய்வாளரிடம் சொன்ன வாக்குமூலத்தை போலவே என்னிடம் வாக்குமூலம் சொன்னதால் நான் அதை பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் எதிரி மற்றும் களவு சொத்து குறித்து கிடைத்த தகவலின்படி ஆந்திரமாநிலம் செல்லவேண்டி இருந்ததால் நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கடந்த 28.07.2009ம் தேதி நான், உதவி ஆய்வாளர் கனகராஜ், மு.நி.கா பாலசுப்பிரமணி, மாரப்பன் ஆகியோர்கள் ஆந்திரா செல்வதற்காக முன் அனுமதி கடிதம் பெற்றேன். அதன் பிறகு சாட்சிகள் செந்தில், தனபால், அசோகன் ஆகியோர்களுடன் புறப்பட்டு 31.07.2009ம் தேதி ஆந்திர மாநிலம் புரட்டத்தூர், பஸ் நிலையம் அருகில்நின்று கொண்டிருந்த எதிரி மோகன் என்பவரை இவ்வழக்கின் வாதியான தனபால் என்பவர் அடையாளம் காட்ட மாலை 05.00 மணிக்கு கைது செய்து மேற்படி எதிரியை விசாரிக்கையில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை சாட்சிகள் செந்தில் மற்றும் அசோகன் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் இவ்வழக்கில் கடத்தப்பட்ட வாகனம் TN 39 AB 0283 டயோட்டா குவாலிஸ் டூரிஸ்ட் வாகனத்தை புரட்டத்தூர் வன இலாகா அலுவலகத்தில் பின்புறம் இருந்த காரை அதே சாட்சிகள் செந்தில் மற்றும் அசோகன் முன்னிலையில் ஒரு மகசரில் கைப்பற்றினேன்.

3) அதன் பிறகு எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வாகனம் மற்றும் சாட்சிகளுடன் நிலையம் வரும்போது 01.08.2009 ம் தேதி காலை 09.30 மணிக்கு வையப்பமலை ரோட்டில் உள்ள பாலம் அருகே இரும்பு கத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மேற்படி எதிரி ஆஜர் செய்ததை ஒரு மகஜரில் கைப்பற்றினேன். கைப்பற்றப்பட்ட தடயங்கள் மற்றும் எதிரியுடன் காவல் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் வாதி தனபாலுக்கு சிகிச்சை அளித்த நாமக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.செந்தில்நாதன் என்பவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்றேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிற**து.

4) பின்னிட்டு சாட்சிகள் செந்தில், தனபால் ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி அசோகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச 394 ல் இருந்து 394 உ/இ 397 ன் படி சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை**

**அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் எனது விசாரணையை முடித்து மோகன் மற்றும் ரவி என்கிற ரவிநாயக் என்பவர் மீது இதச பிரிவு 394 உ/இ 397 ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**மறுவிசாரணை–இல்லை.**